3rd November 1966]

விவசாயிகளுக்குக் கிணறுகள்

*363 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்குப் பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக் கடனுதவி அளிக்க புதிய திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ஒரு பகுதி கடனும் ஒரு பகுதி உதவித்தொகையும் வழங்கும் திட்டம் ஒன்றை, வேளாண்மைத்துறை, 1964 ஆகஸ்ட் மாதம் முதல் நிறைவேற்றி வருகிறது. ஓர் உழவருக்கு அளிக்கப்படும் அதிக அளவுக் கடன் ரூ. 2,000 ஆகும். இதில் 10 சதவீதம் உதவித் தொகையாகக் கருதப்படும். கடன் தொகை ரொக்கமாகக் கொடுக்கப்படமாட்டாது. ஆனால் கிணறுகளை ஆழப்படுத்தும் செலவில் சரிக்கட்டப்படும். பாறை உடைக்கும் இயந்திரங்களையும் பணியாளர்களையும் வேளாண்மைத் துறை அளிக்கும்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக இப்பொழுது கொடுக்கப்படுகிற தொகை, இரண்டாயிரம் ரூபாய் போதாது; அதை அதிகமாக்கிக் கொடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். ஆகவே, அதைப் பரிசிலனை செய்து, அந்தத் தொகையை அதிகமாக்குவதற்குச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே கிணறுகள் இருந்தால், அவற்றை ஆழப்படுத்துவதற்குத்தான் இந்தத் திட்டமே தவிர, புதிதாகக் கிணறு வெட்டுவதற்காக அல்ல. புதிதாகக் கிணறு வெட்டினால் எவ்வளவு செலவாகும் என்பதையும் கருத்தில் கொண்டுதான் இந்தத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : புதிதாகக் கிணறு வெட்டவேண்டும் அல்லது பழைய கிணற்றை ஆழப்படுத்தவேண்டும் என்பதற்காகப் பஞ்சாயத்து யூனியனுக்கு மனுப் போட்டால், அங்கிருந்து சாங்ஷன் வருவதற்குக் குறைந்தது நான்கைந்து மாதங்கள் ஆகின்றன; அங்கிருந்து சாங்ஷன் வராமல் கிணறு தோண்ட முடியவில்லை. ஆகவே, ஒரு விவசாயி பழைய கிணற்றைத் தோண்டுவதற்கோ அல்லது புதிய கிணற்றை வெட்டுவதற்கோ பஞ்சாயத்துக்கு மனுப் போட்டால், மனுப் போட்ட ஒரு மாதத்திற்குள்ளே கிணறு வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் ஏதாவது உத்தரவு பிறப்பிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : பழைய கிணறு புதிய கிணறு என்கிற பிரச்னை அல்ல. இந்தக் கேள்வி பழைய கிணறு சம்பந்தப்பட்டது. கனம் அங்கத்தினர் கோருகிற விஷயத்திற்குத் தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

திரு. செ. மாதவன் : கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கக் கூடிய உதவித் தொகை விவசாயிகளிடத்தில் சேருவதற்கு முன்னாலே, பாதித் தொகை எப்படியோ சரியாகப் போய்விடுகிறது என்று சமீபத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கருத்துத் தெரிவித்தது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அதிலுள்ள ஊழலைப்பற்றிப் பரிசீலிக்கப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர் அபிப்பிராயம் சொல்லியிருப்பது உண்மைதான். சிற்சில இடங்களில் குறை ஏற்படுகிறது. குறைகளையெல்லாம் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை அரசாங்கம் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி : பழைய கிணறுகளைத் தூறு எடுப்பதற்கு ஆகும் செலவுத் தொகையைப் பணமாகக் கொடுப்பதில்லை, பாறை உடைக்கும் இயந்திரங்களையும் பணியாளர்களையும் வேளாண்மைத் துறை அளிக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், இயந்திரங்கள் மூலம் ஆழப்படுத்தாமல், ஆட்கள் மூலமாகத் தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளில் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றிற்காக ஆகும் செலவுத் தொகையை அரசாங்கம் நேரடியாக ரொக்கமாகக் கொடுப்பதில்லை என்றால், விவசாயிகளுக்குப் பணம் கிடைப்பது எப்படி, ஆழப்படுத்துவது எப்படி என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பாறை உடைக்கும் இயந்திரங்களையும் பணியாளர்களையும் கொடுப்பதனால் விவசாயிகளுக்கு அதிகத் தொந்தரவு இருக்காது.

திரு. எஸ். மணி : பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு உதவித் தொகை கொடுக்காமல், புதிய கிணறுகளுக்காகத்தான் இப்பொழுது கடன் கொடுக்கிறார்கள். எங்களுடைய வட்டாரத்தில் நான்கு யூனியன்களிலும், பழைய கிணறுகளுக்கான கடன் கொடுப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அதை நிறுத்தி வைத்திருப்பது நல்லதல்ல. அப்படி நிறுத்தி வைத்திருந்தால், உடனடியாகக் கொடுக்க அரசாங்கம் ஆணையிடுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் சொல்லும் தகவல் எனக்குத் தெரியாது. திருச்சி மாவட்டத்தில், பெரம்பலூர் தாலுக்காவில் புதிய கிணறுகள் அதிகமாக வெட்டும் காரணத்தால், அதிலே அதிக கவனம் செலுத்தும் காரணத்தால், பழைய கிணறுகளை ஆழப்படுத்தும் வேலை ஒரு வேளை குறைந்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. ம. கமலநாதன் : புதிய கிணறுகளை வெட்டி அதனாலே நாம் உடனடியாகப் பலனை எதிர்பார்ப்பதை விட, ஏற்கனவே இருக்கும் கிணற்றை ஆழப்படுத்துவது உடனடியாகப் பலன் தர முடியும் என்ற அளவிற்கு அரசாங்கத்திலிருந்து சமீபத்தில் குறிப்பு

வந்திருக்கிறது. ஆனல், நண்பர் திரு. மணி அவர்கள் சொன்னது போல, பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு 'அலாட்மெண்ட்' கிடையாது. அதற்காக புதிய 'அலாட்மெண்ட்' செய்ய ஏதாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் அரசாங்கம் நிதி ஒதுக்கியிருக்கிறது. 1965-66-ம் ஆண்டில் ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் 80 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டிருக்கின்றன, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 610 கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 12.20 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* 364 கேள்வி.—திரு. நா. இராசாங்கம் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் தாலூகா, பார்வதிபுரம் கிராமத்தில் 1957-ம் ஆண்டு Bore weli ஒன்றும் 1959-ல் ஆர்ட்டிஷியன் கிணறுகள் இரண்டும் அமைக்கப்பட்டது உண்மையா ?

(இ) இவைகளில் ஆர்ட்டிஷியன் (ஊற்றுக்) கிணறுகள் இரண்டும் கெட்டுவிட்டது உண்மையா ?

(உ) கெட்டுவிட்ட கிணறுகளைப் பழுதுபார்க்க வேண்டுமென அங்குள்ள விவசாயிகள் அண்மையில் கோரிக்கை ஏதேனும் அரசாங்கத்துக்கு கொடுத்துள்ளனரா?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1957-ல் குழாய்க் கிணறு ஒன்றும், 1960-61-ல் ஊற்றுக் கிணறுகள் இரண்டும் வெட்டப்பட்டன.

(இ) முதல் (எ) வரை : 1960-லும் 1961-லும் அமைக்கப்பட்ட இரு ஊற்றுக்கிணறுகள் நெய்வேலித் திட்டப் பகுதியில் நீரை அதிகமாக இறைப்பதனல் நீர் வேகம் குறைந்து துணை ஊற்றுக் கிணறுகளாக மாறிவிட்டன. அவற்றைச் செப்பனிடும்படி குடியானவர்களிடமிருந்து வேண்டுகோள் எதுவும் வரவில்லை. ஆயினும், சிதம்பரம், வேளாண்மை உதவிப் பொறியாளர் மேற்படி கிணறுகளில் பம்பு செட்டுகளை நிறுவி, அவை சமுதாயப் பொதுக் கிணறு நீர் இறைப்புத்திட்டங்களாகச் செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

திரு. நா. இராசாங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாகவே, நெய்வேலிக்கு அருகாமையில் உள்ள பகுதி ஊர்களில் நெய்வேலி நீர் ஊற்றினல்தான் தண்ணீர் நின்றுவிட்டது என்று காரணம் சொல்கிறார்கள். அதை யாரும் இன்வெஸ்டிகேஷன் பண்ணவில்லை. நெய்வேலிக்கு 1 மைல், 1½ மைலில் நல்ல நீர் ஊற்றுள்ள கிணறுகள் கிடைத்திருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்து பார்ப்பார்களா? இல்லை என்றால் 60 ஏக்கரா, 70 ஏக்கரா மணிலாப் பயிர்கள் சாகுபடி கெட்டு வருகிறது.